[4th November 1958

*Cost of living index*

*826 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) விலைவாசி உயர்வு விஷயமாக எடுக்கக்கூடிய புள்ளி விவரம் எந்தெந்த பொருள்களின் விலைவாசிகளை வைத்து எடுக்கப்படுகிறது ?

(ஆ) எந்த ஆண்டு முதல், இதுபோன்ற முறையில் எடுக்கப்பட்டு வருகிறது ?

(இ) எத்தனை இடங்களில் எடுக்கப்படுகிறது ?

(ஈ) எந்த இடங்களில் எடுக்கிற புள்ளி விவரங்களின் அடிப்படையில் பஞ்சப்படி கொடுக்கப்படுகிறது. ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement[a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த புள்ளி விவரங்களைக் கண்டு பிடிக்கக்கூடிய செண்டர்கள் பல இடங்களில் இருந்த போதிலும் ராஜ்யம் பூராவும் கொடுக்கப்படும் பஞ்சப்படி குறைந்த அளவில் புள்ளி விவரம் இருக்கக்கூடிய சென்னையில் எடுக்கப்படும் புள்ளி விவரங்கள் அடிப்படையில் கொடுப்பதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சென்னையில் வாழ்க்கைத் தரம் குறைந்திருக்கிறது என்று கனம் அங்கத்தினர் கருதுகிறார் என்று நினைக்கிறேன். இப்படிப்பட்ட புள்ளி விவரங்கள் ஆறு இடங்களில் எடுக்கப் படுகின்றன. அதாவது கடலூர், திருச்சி, மதுரை, கோயமுத்தூர், நாகர் கோவில், சென்னை நகரம். இவைகளையெல்லாவற்றையும் சேர்த்துத் தான் மொத்தத்தில் புள்ளி விவரம் நிர்ணயிக்கப்படுகிறது.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்தப் புள்ளி விவரங்கள் எந்த அடிப்படையில் தயாரிக்கப்படுகிறது. மார்க்கெட் விலையை அனுசரித்து கணக்கிடப்படுகிறதா ? டிபார்ட்மெண்ட் விலைக்கும் மார்க்கெட் விலைக்கும் வித்தியாசம் இருக்கிறதே, அதாவது மார்க்கெட் விலை அதிகமாக இருக் கிறதே, அதனால் எந்த விலையை அடிப்படையாக வைத்துக்கொண்டு புள்ளி விவரங்களை கணக்கில் எடுக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விலைகள் எல்லாவற்றை யும் அவ்வப்போது பார்த்துத்தான் இது நிர்ணயிக்கப்படுகிறது.

SRI K. SATTANATHA KARAYALAR : கழிந்த வாரம் வந்திருக்கிற ஸ்டாட்டிஸ்டிகல் புள்ளி விவரத்தைப் பார்த்தால் ஒரு மூட்டை ஆனைக் கொம்பன் அரிசி மார்க்கெட்டில் 40 ரூபாய்க்கு விற்கப்படுவதாக கணக்கிடப் பட்டிருக்கிறது. ஆனால் அதே அரிசி இன்றைக்கு மார்க்கெட்டில் 68 ரூபாய் விலைக்கு விற்கப்படுகிறது. அதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மார்க்கெட் விலை, மற்றுமுள்ள எல்லா விலைகளையும் கணக்குப் பார்த்துத்தான் ஸ்டாட்டிஸ்டிக்ஸ் எடுக்கப்பட்டு புள்ளி விவரம் நிர்ணயிக்கப்படுகிறது.

SRI S. RAMALINGA PADAYACHI : இம்மாதிரி புள்ளி விவரங்கள் சேகரிக்கும்போது சினிமா போன்றவைகளின் கணக்குளெல்லாவற்றையும் சேர்த்து எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவைகளையெல்லாம் சேர்ப்பது இல்லை.

SRI V. K. KOTHANDARAMAN : இப்பொழுது புள்ளி விவரங்களை எடுக்கக்கூடிய அதிகாரிகள் ஆபீஸ்களில் இருந்து கொண்டே விலைவாசிகளை நிர்ணயிக்க அது சம்பந்தப்பட்ட முதலாளிகளுக்கு லெட்டர் எழுதி அவர்கள்

---

[a] Printed as Appendix III on page 584 infra.

4th November 1958]

கொடுக்கக்கூடிய விலைவாசிகளை வைத்துக்கொண்டு புள்ளி விவரங்களை தயாரிப்பது சர்க்காருக்கு தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன். இதுபோன்று தயாரிப்பது முறையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பொதுவாக குற்றம் சாட்டினால் அதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏதாவது ஒரு அதிகாரியைப்பற்றி குறிப்பாக எடுத்துச் சொல்லி புகார் சொல்லக் கூடிய தகவல் இருந்தால் அதை என்னிடம் எழுதிக் கொடுக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI M. JAGANNATHAN : May I know, Sir, whether the Government will come forward to compile index numbers for more places than the six mentioned in the statement placed on the table of the House?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think it is necessary. These six places cover fairly the entire State.

*Statistics about lands under cultivation.*

* 827 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகாரா அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

இம்மாகாணத்திலே (1) நஞ்செய் பூமி, (2) தோட்டக்கால் பூமி, (3) புஞ்செய் பூமி ஆகியவைகளிலே ஒவ்வொரு இனத்திலும் எத்தனை எத்தனை ஏக்கராக்களில் இப்பொழுது வெள்ளாண்மை செய்யப்பட்டு வருகின்றது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement[a] is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : மேஜையில் மீது வைக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரங்கள் 1955–56-க்கு எடுக்கப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது. 1955-ம் வருஷத்திற்குப் பிறகு அநேகம் புஞ்சை பூமிகள் நஞ்சை பூமிகளாக மாற்றப்பட்டருக்கின்றன. ஏனென்றால் பல அணைக் கட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆகையால் நஞ்சை பூமி விஸ்தீர்ணம் அதிகமாகி இருக்கலாம். ஆகவே 1958-ம் வருஷத்திய புள்ளி விவரங்களை எடுத்து இந்த சபை மேஜையின் மீது வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 1955–56-க்குப் பிறகு அதிகப்படியான புஞ்சை நிலங்கள் நஞ்சையாக மாற்றப்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : நஞ்சை, புஞ்சை, தோட்டக்கால் இவைகளைத் தவிர புறம்போக்கு தரிசு நிலங்களையும் வெள்ளாண்மை செய்ய சர்க்கார் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அவைகளை சாகுபடிக்குக் கொண்டு வருவது என்பது சுலபம் அல்ல. சேலம் ஜில்லா ஆத்தூரில் சுமார் முப்பது ஆயிரம் ஏக்கருக்கு மேலுள்ள நிலத்தை நிலமில்லாதவர்களுக்கு வெள்ளாண்மைக்காகக் கொடுக்கப்படுடிருக்கிறது. அவற்றில் வெள்ளாண்மை செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அவைகளைப் பற்றியெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டியதாக இருக்கிறது.

---

[a] Printed as Appendix IV on page 585 infra.